# உரைகளில் முற்றுச்சொற்களின் பயன்பாடு

கு.கமலகிருஷ்ணன் / K.Kamalakrishnan
தமிழ்த்துறை / Department of Tamil
எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி / SRM Arts and Science College
காட்டாங்குளத்தூர் / Kattankulathur
kamalkumaran85@gmail.com

*Manuscript received 16 March 2022*
*Manuscript accepted 30 August 2022*

## Abstract
In Tamil, a verb performs traid functions in term of showing tenses, such as, past, present and future. Along this it also displays other grammatical functions. As its functionality is concerned, it also perform adequate role to ensure the function of verbal phrase is performed appropriately. The use of adverbs in the text of Parimelazhagar and Nachinarkiniyar clearly display the role of verbal phrases and adverbs clearly with their residual participles. This article explains the role of singular adverb, plural adverb, plural adverb, adverb of doing, adverbial adverb, adverbial adverb, adverbial-adverbial, adjective-adverbial, feminine adverbial, future plural adverb, superlative plural adverbial, adverbial adverbial, adverbs in those texts, comparatively.

## Keywords
Tolkappiyam, Nannul, Pavanandi Munivar, Sivagnanamunivar, Parimalajagar, Naccinarkkiniyar, Verbal Phrases, Adverb complement.

## ஆய்வுச்சுருக்கம்
வினைமுற்றுச் சொல்லானது இறப்பு, எதிர்வு, நிகழ்வு என முக்காலத்தையும், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களுடனும் வரும். ஒரு முற்றுச்சொல்லானது தெரிநிலை வினையாவும், குறிப்பு வினையாகவும் வந்து முற்றுப்பெறும் தன்மை கொண்டதாகும். பரிமேலழகர் உரையில் வரும் முற்றுச்சொற்களின் பயன்பாடு, நச்சினார்க்கினியர் உரையில் வரும் முற்றுச்சொற்களின் பயன்பாடு, எச்சம் துணைவினையைக்கொண்டு முற்றாதல் ஆகியன குறித்து இவ்வாய்வுக் கட்டுரையில் விரிவாய் காணலாம். தனித்தன்மை முற்றுச்சொல், பலர்பால் படர்க்கை முற்றுச்சொல், அஃறிணைப்பன்மை வினைமுற்று, செய்யும் என்னும் முற்றுச்சொல், வியங்கோள் வினைமுற்று, அல் ஈற்று வியங்கோள், அகர ஈற்று வியங்கோள், வினையெச்சம் வேறுபல பெயர் பெற்று முற்றாதல், பெண்பால் படர்க்கை வினையெச்சமுற்று, எதிர்காலத் தன்மைப்பன்மை வினையெச்சமுற்று, உயர்திணைப் பலர்பால் படர்க்கை தெரிநிலை வினையெச்சமுற்று, வினையெச்சம் வினைகுறிப்பு முற்றாய்த் திரிதல், செய்தெனெச்சம் வினைக்குறிப்போடு முற்றாதால், வினையெச்சம் வினைக்குறிப்பு முற்றாதல் ஆகியன உரையாசிரியர்களின்வழி முற்றுப்பெறும் தன்மையை இனம் காண்பதாக அமைந்துள்ளது.

## கருச்சொற்கள்
தொல்காப்பியம், நன்னூல், பவணந்திமுனிவர், சிவஞானமுனிவர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர், முற்றுச்சொற்கள், வினையெச்சத் தொடர்கள், எச்சம் முற்றாதல்.

## முன்னுரை
இடைக்கால உரையாசிரியர்களான பரிமேலழகர் மற்றும் நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளில் விளக்கம் பெறும் வினைமுற்றுச் சொல்லின் தன்மையினை இலக்கண நூல்களுடன் ஒப்புநோக்கி ஆராயப்படவுள்ளது. இது நமக்குக் கிடைக்கக்கூடிய முதல் இலக்கணமான தொல்காப்பியம் கூறும்

வினைமுற்றுச் சொற்களின் ஈறுகளின் தன்மைகளைப் பவணந்தி முனிவர் மற்றும் சிவஞான முனிவர் கூறும் முற்றுச்சொற்களின் வகைப்பாட்டின் தன்மைகளில் ஏற்படும் வளர்ச்சி மாற்றத்தின் இன்றியமையாமையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. இங்கு முற்றுச்சொல்லானது ஆக, அன்று, ஆகிய, துணைவினைகளைக் கொண்டு முற்றாதல், எச்சம் முற்றுச்சொல்லாதல், செய்யும் என்னும் பெயரெச்சம் முற்றாதல், தன்மை வினைமுற்று ஈறுகள், படர்க்கை வினைமுற்று ஈறுகள், ஏவல் பொருண்மை கொண்ட வியங்கோள் வினைமுற்று ஈறுகள் வினையெச்சம் வேறுபல பெயர்ப்பெற்று முற்றாதல் ஆகிய முற்றுச்சொற்கள் உரையாசிரியர்களின் உரையில் விளக்கம் பெறும்போது அதன் ஈறுகளில் ஏற்படும் மாற்றத்தை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## முற்றுச்சொற்களின் பயன்பாடு

ஒரு வினைச்சொல்லானது முக்காலத்தையும் தெளிவாகவோ, குறிப்பாகவோ கொண்டு தெரிநிலை வினைத்தன்மையும் குறிப்பு வினைத்தன்மையும் பெற்று வரும் முற்றுச்சொற்களினைப் பற்றிப் பின்வரும் சான்றின் மூலம் காணலாம். உரையாசிரியர்கள் கூறக்கூடிய முற்றுச்சொற்களைத் தொல்காப்பியர் கூறக்கூடிய முற்று விதிகளுடன் ஒப்புநோக்கலாம். தொல்காப்பியர் முற்றுச் சொல்லினைப் பின்வருமாறு வரையறைப்படுத்துவர்.

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
மூவிடத் தான வினையினுங் குறிப்பினும்
மெய்ம்மை யானும் ஈரிரண் டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே" (தொல், சொல், நூ.243.)

இந்நூற்பாவின் மூலம் முற்றுச்சொல்லின் தன்மையைத் தெளிவுப்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் வினைச்சொல்லின் தன்மையை உணர்த்த,

1. இறப்பு
2. எதிர்வு
3. நிகழ்வு என முக்காலத்திலும் வரும், இவை

1. தன்மை, 2. முன்னிலை, 3. படர்க்கை ஆகும்.

ஆகிய மூவிடத்தும் வரும் என்பர். வினைமுற்றானது தெரிநிலை வினையாகவும் குறிப்பு வினையாகவும் வந்து முற்றுப்பெறும் தன்மையுடையது. வினைச்சொல் குறிப்பிட்ட இந்த ஆறுவகை உருபை ஏற்று முற்றுப்பெறுவது வினைமுற்றுச் சொல்லாகும். இம் முற்றுச்சொல்லானது தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என்ற இருவகை வினைமுற்றுள் தெரிநிலை வினைமுற்றானது முக்காலத்தை வெளிப்படையாகக் காட்டுவதாக அமைகிறது. இதனை மூன்று வகையாக வகைப்படுத்தலாம், அவை இறந்தகாலத் தெரிநிலைவினை, எதிர்காலத் தெரிநிலைவினை, நிகழ்காலத் தெரிநிலைவினை என்பனவாகும். இம் முப்பிரிவுகளுடன் குறிப்பு வினைமுற்றைச் சேர்க்க நான்கு வகைப்படும். எனவே, இந்நான்கு வகை வினையும் ஒருமை, பன்மை ஏற்கும் இயல்பின.

இக்கருத்தானது எட்டு வகையான வினைமுற்று வடிவம் பெறும் தன்மையுடையது. இந்த எட்டு வகையும் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிடப் பெயர்களுடன் புணரும்போது இருபத்து நான்கு வகையாக விரியும் (தெய்வச்சிலையார், தொல், சொல், நூ.243.) தன்மையுடையதாகும். எனவே, வினைமுற்று இலக்கணம் குறித்துத் தொல்காப்பியம் கூறும் வகைப்பாட்டின் தன்மையினைக் கருத்தில் கொண்டு உரைகளில் காணும் வினைமுற்றுக்களை, நன்னூல் கூறும் வினைமுற்று இலக்கணத்துடன் ஒப்புநோக்கித் தெளியலாம். நன்னூலார் வினைச்சொல் குறித்துச் 'செய்பவன் (கருத்தா), கருவி, இடம், செயல், காலம், செய்பொருள்' (பவணந்திமுனிவர், நன்னூல், நூ.320.) என்ற

ஆறும் தருவது வினை என்றுரைப்பார். முற்றுவினை குறித்துக் கூறும்போது தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று ஆகியனவற்றிற்கு மேற்கண்ட செய்பொருள் முதல் ஆறும் தோன்றும் இயல்பின. தெரிநிலை வினை முற்றின் வகைகளை இருப்பத்தியேழு (27) என வரையறைப்படுத்துவர் பவணந்திமுனிவர்.

சிவஞானசுவாமி உரையின் வழித் தெரிநிலை வினைமுற்றின் வகைகளைப் பின்வருமாறு விரிவுபடுத்தலாம். “ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐம்பாலாகிய வினைமுற்றுகளைப் பாடர்க்கைக்கண்ணும், ஒருமை பன்மை என்னும் இருபாலவாகிய வினைமுற்றுகளைத் தன்மைக்கண்ணும் முன்னிலைக்கண்ணும் வைத்து, முக்காலங்களானும் மாற, முறையே படர்க்கை வினைமுற்றுப் பதினைந்தும் தன்மைவினைமுற்று ஆறும் முன்னிலை வினைமுற்று ஆறுமாகிய முற்றுவினைச்சொல் ஒன்றுமே இருபத்தேழாம்.” (சிவஞான முனிவர், நன்னூல்.நூ.324) தொல்காப்பியர் தெரிநிலை வினைமுற்றை வகைப்படுத்தும்போது பதினெட்டு(18) என்று கூறுவர்.

எனவே, தொல்காப்பியர் காலத்து வழக்கில் உள்ள தெரிநிலை வினைமுற்று வகைப்பாட்டைப் பின்னர் நன்னூலார் காலத்து வழக்கில் உள்ள வகைப்பாட்டுடன் ஒப்பிடும்போது ஒன்பது வகையான தெரிநிலை வினைமுற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ள நிலையை இனங்காண முடிகிறது. காரணம் நன்னூலார் கொண்ட செய்பவன் முதலாகச் சொல்லப்பட்ட ஆறனுள் அடங்கும். இவ்வாறனுள் இடம், செயல், காலம் ஆகியன தொல்காப்பியத்துடன் ஒத்துள்ளது. செய்பவன், செய்பொருள், கருவி ஆகியன நன்னூலார் கொண்ட விரிவகைக்குக் காரணமாகக் கருதலாம். இம்மூன்றும் பவணந்தி முனிவரை இருபத்தியேழு என்று வரையரைப்படுத்த உதவியுள்ளது. எனினும் நச்சினார்க்கினியர் வினைமுற்றின் வகைகளாக இருபத்தெட்டு என்றும் தொல்காப்பிய உரையில் கூறுவர். எனவே, இந்த இருபத்தியேழு மற்றும் இருபத்தியெட்டு என்ற வினைமுற்று வரையறையைக் கருத்தில் கொண்டு உரைகளில் காணப்படும் வினைமுற்றின் தன்மையை இனங்காணுவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

### முற்றுச்சொல் புறனடை

தொல்காப்பியர் சில வினைமுற்றுகளைப் புறனடையாக வகைப்படுத்துவர். அவை வியங்கோள் வினைமுற்று, இன்மை முற்று, செய்மன முற்று, வேறுவினைமுற்று, செய்யும் என்பனவற்றைக் கொண்டு முடியும் பெயர்ச்சொல்லின் தன்மையை வினைமுற்றுகள் என்று வகைப்படுத்தலாம். அவை, “எவ்வயின் வினையும் அவ்வயின் நிலையும்” (தொல்,சொல், வினை,நூ.244.) என்பனவற்றைக் கொண்டு தொழில், இடம், காலம், பால் உணர்த்தும் வினை அல்லாமல், மூவிடத்தும் பொதுவான தன்மையில் வரும் வினைச்சொல்லினை முற்று என்று வரையறுக்கலாம். இம்முற்றுச்சொற்கள் பெயர்ச்சொற்களோடு முடியும் என நூற்பா 245-இல் கூறுவர். வினைச்சொல்லோடு அடுக்கி வந்து முற்றுப் பெறுதலும், உம்மை பெற்றும், அடுக்காது வருவதும், எத்திறத்தானும் என்றமையால் பெயர்கொண்டு முற்றுப் பெறுதலும் உண்டு. எனினும் இம்முற்றுத்தொடரைப் “பெயர் முந்துற்றதனை எழுவாய்த்தொடர் என்றும், வினைமுந்துற்றதனை முற்றுத்தொடர் என்றும் வழங்கினும் அமையும்.” (தெய்வச்சிலையார் (உ.ஆ), தொல், சொல், வினை, நூ.244.ப.196) எனவே எழுவாய்த்தொடர், முற்றுத்தொடர் என்ற இருவகையானத் தொடரமைப்பைப் பெற்று வரும் முற்றுத்தொடர்களைப் பின்வரும் வினைமுற்றுச்சொற்களின்வழிக் இனம் காணலாம்.

### எதிர்கால முற்றுச்சொல்

திருக்குறளுக்கு உரை இயற்றிய பரிமேலழகர் 378-ஆம் குறள் விளக்கத்தில் துறப்பார் என்ற பலர்பால் எதிர்கால வினைமுற்றுச் சொல்லை விளக்க முற்படுகிறார். “துறப்பா’ ரென்பது ஆரீற் றெதிர்கால முற்றுச்சொல்.” (பரிமேலழகர் (உ.ஆ), குறள்.378) வறுமையிலும் நுகர்ச்சி இல்லாதவர் உலகத்து நிலையில்லாப் பொருளின் மீது ஆசைகொள்ளார். இங்குத் துறவின் நிலை ஊழ்வினையின் காரணமாக வந்துள்ளது. இத்துறவு என்பது பகர இடைநிலை ஒற்றுப் பெற்று எதிர்காலத் தன்மையை உணர்த்தும், ஆர் ஈற்று எதிர்கால வினைமுற்றைக் கொண்டு முற்றுப் பெற்றுள்ளதால், ஊழ்வினை எஞ்சி நிற்றலை உணர்த்த ஆர் ஈற்று எதிர்கால வினைமுற்று விகுதியைப் பயன்படுத்தியுள்ளார்.

இக்கருத்தினை உணர்த்த ஆர் என்ற பலர்பால் வினைமுற்று விகுதியுடன் பகர இடைநிலையும் இணைந்து எதிர்கால வினைமுற்று விகுதியை உணர்த்துவதால் எதிர்கால முற்றுச்சொல் என்பர்.

## நச்சினார்க்கினியர் உரையில் முற்றுச்சொல் பயன்பாடு

நச்சினார்க்கினியர் முற்றுச் சொல்லிலக்கணம் குறித்து எச்சவியலில் 427ஆம் நூற்பாவில் “இனி, அவை காலத்தொடு வருங்கால், றகர உகரம் இறந்த காலத்தாற் சிறந்தது. உம்மொடு வரூஉம் கடதறவும், கடதற என்னும் அந்நான்கு ஊர்ந்த குற்றியலுகரமும், அல்லும் பகரமும் மாரும் ஆவும் வவ்வும் ஆகிய பதின்மூன்றும் எதிர்காலத்தாற் சிறந்தன. அம், ஆம், எம், ஏம், என், ஏனும், அன், ஆனும், அள், ஆளும், அர், ஆரும், அகரமும், தகர உகரமும் ஆகிய பதினான்கும் முக்காலத்தாற் சிறந்தன. முற்று இருபத்தொன்பதின்கண் டகர உகரம் வினைக்குறிப்பு ஆதலின், அதுவும் முக்காலத்தாற் சிறந்ததாம். ஆகத் தெரிநிலை முற்று இருபத்தெட்டுங் காண்க.” (நச்சினார்க்கினியர், தொல், சொல், எச்சம்,நூ.427,ப.314) இம்முற்றிலக்கணப் புறனடையாக “எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும்” என்ற நூற்பா விளக்கத்தில் “இறப்புபற்றி வருவனவும், இறப்பும் நிகழ்வும் பற்றி வருவனவும், எதிர்வுபற்றி வருவனவும், முக்காலமும் பற்றி வருவனவுமாம் என்றவாறு.” எனவே, இங்கு முற்றுச்சொல்லீறு முக்காலம் பற்றி வரும் வினையெச்சங்களையும், பெயரெச்சங்களையும் கொண்டு வினைமுற்றாகும்.

எனினும் முற்று சொல்லீற்று இலக்கணங்கூறுதற்கு இடையே எச்ச இலக்கணத்தைக் கூறினார். எவ்வாறு எனில் ‘பருந்து விழுக்காடாக மாட்டேறிற்று என்று கருதி’ (நச்சினார்க்கினியர், தொல், சொல், எச்சம், நூ.428, ப.315) என்பதன் மூலம் மாட்டேறு முறையில் எச்சம் முற்றாதல் நிலையைத் தெளிவுறுத்துகிறார். இவ்வாறு நச்சினார்க்கினியர் முற்றுச்சொல்லீற்று இலக்கணம் பற்றிக் கூறும்போது இருபத்தெட்டு என்று வரையறைப்படுத்துவர். எனவே முற்றுச்சொல்லீற்று வளர்ச்சி நிலையைத் தொல்காப்பியர் 18 என்றும், பவணந்திமுனிவர் 27 என்றும், நச்சினார்க்கினியர் 28 என்றும் வரையறைப்படுத்துவர். எனவே, ஒன்று புலப்படுகின்றது, கால ஓட்டத்துக்குத் தக வினைமுற்றுச்சொல் வளர்ந்த வளர்ச்சியை நோக்க முடிகிறது. தொல்காப்பியர் காலத்துக்கும் நன்னூலார் காலத்துக்கும் ஏறக்குறைய பன்னிரண்டு நூற்றாண்டு கால இடைவெளியில் வளர்ந்த வளர்ச்சியாக ஒன்பது வகையான வினைமுற்றுச் சொல்லீற்றைக் காணமுடிகிறது. ஆனால், நன்னூலார் காலத்துக்கும் நச்சினார்க்கினியர் காலத்துக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி இல்லாதிருத்தலால் இக்கால இடைவெளியில் வளர்ந்த வினைமுற்றுச் சொல்லீற்று வளர்ச்சியாக ஒன்றனை விரிவுபடுத்திக் கூறுவர், நச்சினார்க்கினியர். எனவே, ஒன்றை அவதானிக்க முடிகிறது. காலந்தோறும் இலக்கியங்கள் வளர்வது போல இலக்கண உறுப்புகளும் வளர்ச்சி அடைந்துள்ளதை அவ்வப்போது தோன்றிய உரைகளின் வழி உரையாசிரியர்கள் வளர்த்த வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளனர் என்பது புலப்படுகின்றது.

## எச்சம் துணைவினையைக் கொண்டு முற்றுச்சொல்லாதல்

ஓர் எச்சச்சொல் வினைமுற்றாக மாற்றம்பெற அன்று, ஆக முதலிய துணைவினையை ஏற்று வினைமுற்றாகிறது. இம்மாற்றத்தினை விளக்க மாட்டேறு என்ற இலக்கிய உத்தியைக் கையாளும் முறையைப் பின்வருமாறு காணலாம். “சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத, முனையரன் போல வுடைந்தன்றக் காவிற், றுனைவரி வண்டி னினம்” என்ற பாடலடியில் உள்ள உடைந்தன்று என்ற வினைமுற்றுச் சொல்லை விளக்க, தலைவன் தலைவியரிடையே உள்ள ஊடலைத் தீர்க்கும்போது தலைவி கொண்ட கோபத்தினை விளக்குவதாக நச்சினார்க்கினியர் “வேப்பந்தாரினை உடையப் பொதியினையுடைவன் பொருத பகைப்புலத்து அரண் போல் அவ்விடத்தே உடைந்தது என்றவாறு.” இங்கு உடைந்து என்ற வினையெச்சத்துடன் அது என்னும் சுட்டுப்பெயர் உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி புணர்ந்தது. பின்னர் உடைந்தது என்பது ஈறு திரிதல் என்னும் விதிப்படி அன் விகுதியேற்று, அன் விகுதியானது முற்றுப்பெற வேண்டி ‘அன்று’ என்ற துணைவினையாகத் திரிந்து நின்று, உடைந்தன்று என்பது முற்றுச்சொல்லாதல் என்ற இலக்கணப் பண்பை முன்னிலைப்படுத்துகிறது. அவை “உடைந்தன்று

என்பது றகரம் ஊர்ந்த குற்றியலுகர ஈற்று முற்றுச்சொல்” (நச்சினார்க்கினியர், கலித், பா.92,அடி.28,ப.551) என்பர்.

இம்முற்றின்வழிக் கூறக்கடவது தலைவியின் ஊடலைப் பாண்டிய மன்னனின் போர்த் திறத்தின் போது பகை மன்னரின் மதில் உடைந்ததனை ஒப்புமையாக நோக்கியுள்ளார். உடைந்தது என்பது உடைந்து என வினையெச்சமாக ஆகியுள்ளது. இவ்வினையெச்சத்துடன் ‘அன்று’ என்ற துணைவினைச்சொல்லின் ஈற்றில் உள்ள றகரத்தின் மேல் ஊர்ந்த உகரம் குற்றியலுகரம் என்பர். உடைந்தன்று என்பதன் ஈற்று உகரம் குற்றியலுகரம் பெற்றதால் ஈற்றில் நின்ற ‘அன்று’ என்ற துணைவினைச் சொல்லினை முற்று வினைச்சொல் என்கிறார். எனவே, உடைந்து என்ற எச்சம், அன்று என்ற துணைவினையை ஏற்று முற்றுப் பெற்றுள்ளது.

எச்சச்சொல்லின் ஈற்றில் ‘அன்று’ என்ற துணைவினைச்சொல்லைக் கொண்டு முற்றுப் பெற்றுள்ளது. இம் முற்றுச்சொல்லில் உள்ள துணைவினையைப் பிரித்துச் சொற்பொருளை நோக்கினால் வினையெச்சம் தோற்றம் பெறும். “உடைந்தன்று” என்பது முற்றுச்சொல் என்பர். நச்சினார்க்கினியர் கூறுவது போல, எச்சம் முற்றாக மாற்றம்பெற மாட்டேறு என்ற பொருள்கோடல் முறையில் எச்சத்தை முற்றாகப் பொருள்கொள்ள ‘அன்று’ என்ற துணைவினைச் சொல்லை முற்றுச்சொல்லாகப் பொருள்கொள்ளப் பயன்படுத்தியுள்ளார். எனவே, ஓர் எச்சச்சொல் பொருள்கோடல் நோக்கில் முற்றுப்பெறக் கருதி ஒரு துணைவினைச் சொல்லுடன் புணர்ந்து முற்றாய் நடைபெறும் இயல்பு உடையதாகும்.

## செய்யும் என்னும் முற்றுச்சொல்

தொல்காப்பிய இலக்கண மரபுப்படிச் செய்யும் என்ற எச்சத்தைப் பெயரெச்சம் என்பர். எனினும், சில இடங்களில் செய்யும் என்பது முற்றாக வரும் இயல்புடையது. இங்குக் குறிப்பிடப்பட்ட இரண்டாவது கருத்தான செய்யும் என்ற வடிவம் முற்றுச்சொல்லாக வருவதை உரையின்வழி அறிய முடிகிறது. எனினும், தொல்காப்பியர் ‘செய்யும்’ என்ற முற்றுச்சொல் வருமிடம் குறித்து உரைப்பனவற்றைக் காணலாம்.

“பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா“

(தொல்,சொல்,நூ.229,ப.209)

என்ற நூற்பாவின் வழி பலர்பாலைக் கூறக்கூடிய படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகிய மூன்றிடத்தும் நிகழ்காலப் பொருண்மையில் ‘செய்யும்’ என்ற முற்றுச்சொல் வராது. எனவே, ஏனைய பாலிடத்தும் வரும் என்பர். அவை, ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவாகும். எனவே செய்யும் என்பது முற்று, பெயரெச்சம் என இருவகைப்படும்.

“செய்யும் என்பது முற்றும் பெயரெச்சமும் என இருவகைப் படுமென்று கொள்க. அது முற்றாயுழித் தன்மையினும், முன்னிலையினும், உயர்திணைப் படர்க்கைப் பன்மையினும் வாராது, ஏனைப்பாலின் கண்ணே வரும் என்றவாறாம். அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும் என வரும். ஈண்டு நிகழ்காலங் குறித்ததென்னை, எதிர்காலங் குறித்து வாராதோ எனின், எதிர்காலத்துகண் வருவது காலமயக்கமாகக் கொள்க” (நச்சினார்க்கினியர், தொல்,சொல்,வினை,நூ.221,ப.182) என்று உரைப்பர் நச்சினார்க்கினியர்.

செய்யும் என்ற வினைப் பெயரெச்சமாகவும் வரும், முற்றாகவும் வரும் என இருவகைக் கருதுகோள்கள் உண்டு. அவை வேறுபடும் இடங்கள் குறித்து மேற்கண்ட இலக்கணிகளின்வழித் தெளிவுறலாம். இருப்பினும், இலக்கிய உரைகளில் காணப்படும் முற்றுச்சொல் விளக்கத்தினைச் செய்யும் என்னும் வாய்பாட்டு வடிவத்துடன் ஒப்புநோக்கித் தெளியலாம்.

"அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்"

என்ற அடிகளின் விளக்கத்தில் நச்சினார்க்கினியர் ஓர்க்கும், விளக்கும் என்ற இரு சொற்றொடர்களும் முற்றுச்சொல் என்பர். எனினும் ஓர்க்கும் விளக்கும் என்பன செய்யும் என்ற வாய்ப்பாட்டு வடிவில் உள்ளதால் முற்றுச்சொல் எனலாம். செய்யும் என்பது பெயரெச்ச வாய்பாட்டு அமைப்பிற்கு உரியது என்றாலும் சிறப்புநிலையில் வினையெச்ச அமைப்புடையதாகும். எனினும், இங்குப் பெயரெச்சமாகக் கொள்ளக்கூடாது என்பதற்காக முற்றுச்சொல் என்று உரை விளக்கம் மேற்கொண்டுள்ளார்.

"ஓர்க்கும்(96) விளக்கும்(98) என்பன முற்றுச்சொல்" (நச்சினார்க்கினியர்,திருமுருகு,ப.48)

இவ்விரு சொல்லையும் நச்சினார்க்கினியர் முற்றுச்சொல் என்பர். காரணம் என்னவோ எனின் செய்யும் என்ற வாய்பாட்டு நிலையினைப் பெயரெச்சமாகக் கொள்ளாது, வினைமுற்றாகக் கொள்ளவும் கூடும் என்று கருதலாம். ஓர்க்கும், விளக்கும் என்பது பொருண்மை நோக்கிலும் சொல்லளவிலும் முற்றுப்பெற்றுள்ளதால் வினைமுற்று என்பர். வினைமுற்று வடிவமாகக் கொள்ள வேண்டும் என்பதை நன்கு உணர்த்த பொருண்மை நோக்கிய முற்றுச்சொல்லாகக் கருதலாம். எனவே, செய்யும் என்னும் முற்றுச்சொல்லுக்கு இலக்கணமாகத் தொல்காப்பிய நெறிநின்று ஓர்க்கும், விளக்கும் என்பது கால மயக்கமாக வந்த எதிர்கால வினைமுற்றுச்சொல்லாகக் கருத முடியும்.

**தனித்தன்மை முற்று**

தன்வினைக்குரிய ஈற்றினைக் கொண்டு காலம் காட்டும் இடைநிலைகளுடன் முற்றுப்பெற்று வரும் வினைச்சொல்லைத் தனித்தன்மை முற்றுச்சொல் எனலாம். இங்குக் கு, டு, து, று என்ற நான்கு ஈற்றுடனும், அல், அன், என், ஏன் என்ற நான்கு ஈற்றுடனும் ஒரு வினைச்சொல்லானது புணர்ந்து வரும். இது உளப்பாட்டுத்தன்மை ஒருமையில் வழங்கப்பட்டு வந்தால் இதனைத் தன்மை முற்றுச்சொல் எனலாம். இது குறித்துத் தொல்காப்பியர் கூறும் தனித்தன்மை வினைமுற்று விகுதியைக் காண்போம்.

"கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே" (தொல்.நூற்.26)

க, ட, த, ற என்ற நான்கும் மெய்யின் மேல் ஊர்ந்த குற்றியலுகரத்தினை ஈறாக உடைய ஈற்றினைக் கொண்டு என், ஏன், அல் முதலிய ஏழும் உளப்படுத்தாது புணர்ந்து வந்தால் தன்வினையை உரைக்கும் தன்மைச்சொல் எனலாம். எனினும் "குற்றுகரம் நான்கும், பெரும்பான்மை எதிர்காலத்துஞ் சிறுபான்மை ஏனைக்காலத்தும் வரும்" (தொல், சொல்,நூ.205,ப.189) என்பர் நச்சினார்க்கினியர். சான்றாக உண்டிலென், உண்குவென், உண்பென், உண்ணலென் எனவும் வரும். எனவே கலித்தொகையின்வழி நச்சினார்க்கினியர் கூறுவது, "ஏத்துகு தனித்தன்மை முற்று." (நச்சினார், கலி,பா.40,அடி.9,ப.232) 'தேனுறு கதுப்பினாய் யானுமொன் றேத்துகு, வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை' என்ற பாடலடிக்குப் பொருள் கூறும்போது தலைவியானவள் தலைவனின் தனித்தன்மையை ஏற்றிப் பாடுகிறாள் என்றும் அதற்கு மறுமொழியாக வேயும் முன்னின்று பாடுவாயாக என்பது போலச் செய்யுள் அமைந்துள்ளது. மேற்கண்ட செய்யுளடி விளக்கத்துக்கு 'ஏத்துகு' என்பது தனித்தன்மை முற்று என்கிறார் நச்சினார்க்கினியர். இம்முற்றுத் தொல்காப்பிய விதிப்படி ககரத்தின் மேல் ஊர்ந்த குற்றியலுகரத்தினைப் பெற்று ஈற்றில் தன்மை உணர்த்தும் ஈறு பெறாமல் உள்ளது. எனவே, ஏத்துகு என்ற சொற்றொடரினை விளக்க இச்சொல்லில் என், ஏன், அல் என்ற ஈறு பெறாமல் இயற்றிய மூல

நூலாசிரியனின் உளக்கருத்தை உணர்த்த எண்ணி ஏத்துகு என்பது தனித்தன்மை முற்று என்கிறார். இங்கு மூலநூலாசிரியரின் உள்ளக்கருத்தை உணர்த்தும் திறத்தால் இம்முற்றை உளப்பாட்டுத்தன்மை வினைமுற்று என்று கூறலாம்.

தொல்காப்பிய விதியினைத் தழுவி நன்னூலார் நூற்பா 331இல் உளப்பாட்டுத் தன்மை ஒருமை வினைமுற்று விகுதி என்பர்.

"குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு
அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை" (நன்னூல், நூ.331,ப.453)

தன்மை ஒருமை வினைமுற்று விகுதியைக் குறித்துக் நோக்கும்போது நன்னூலார் தொல்காப்பியர் கூறிய ஏழுடன் ஒன்றைச் சேர்த்து, எட்டு வகையான தன்மை வினைமுற்று விகுதிகள் பெற்று வரும் என்பர். எனவே தொல்காப்பியர் காலத்தில் உள்ள தன்மை வினைமுற்றான அல், என், ஏன் என்பனவற்றுடன் தம்கால வளர்ச்சி நிலையில் உள்ள 'அன்' என்ற தன்மை வினைமுற்று வடிவத்தைப் பதிவு செய்துள்ளார். எனவே இலக்கணக் குறிப்புகள் கால மாற்றத்துக்குத் தக வளர்ந்த வளர்ச்சியை உரை வழியாகவும் இடைக்கால இலக்கண நூல்கள் வழியாகவும் அறுதியிட்டுக் கூற முடிகின்றது.

**பலர்பால் படர்க்கை வினைமுற்று**

பலர்பால் படர்க்கை வினைமுற்று ஈறுகளாக அர், ஆர், ப, மார் என்பனவற்றைத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். இந்த வரையறையின்படி கலித்தொகைப் பாடலில் இடம்பெறும் மார் ஈற்றுச் சொல்லை வினைமுற்று என்பர். பலர்பால் வினைமுற்றுச்சொல் வரும்முறை குறித்துத் தொல்காப்பியர்,

"அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே" என்றும்,
"மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியோடு முடியும் என்ப"

என்ற நூற்பா கருத்திற்கு இணங்க நச்சினார்க்கினியர் உரையில் அர், ஆர் என்னும் இரண்டு ஈறும், மூன்று காலமும் பற்றி வருவதாகக் கூறுவர். இவை காலக் கிளவியைப் பெறுமிடத்து அன் ஈற்றோடு அர் ஈறும், ஆன் ஈற்றோடு ஆர் ஈறும் ஒக்கும். பகரம் எதிர்காலம் பற்றி வருங்கால் உகரமும் குகரமும் அடுத்தும் அடாதும் நிற்கும்" (நச்சினார்க்கினி, தொல்,சொல்,வினை,நூ.208,ப.191). எனவே, அர், ஆர் என்ற இரண்டு ஈறும் முக்காலத்திலும் வருமெனினும் பகரம் எதிர்காலம் பற்றி வரும் எனலாம். நன்னூலார் மார் ஈற்று முற்றுச்சொல் குறித்துக் கூறுவன.

"அர் ஆர் பவ்வூர் அகர மார் ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையொடு முடிமே" (நன்னூல்,நூ.327,ப.447)

மார் ஈற்றுவடிவம் குறித்துக் கலித்தொகையின்வழி பின்வருமாறு காணலாம். மார் ஈற்றுச்சொல் எதிர்கால வினைமுற்று வடிவம் என்பதைத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். இக்கருத்துக்குத் தக மார் ஈற்றுச்சொல் எதிர்கால வினைமுற்று உணர்த்திற்று என்பர் நச்சினார்க்கினியர். எனவே, மார் ஈற்றுச்சொல் குறித்துத் தொல்காப்பிய உரையில் "கொண்மார் வந்தார் என வரும். இஃது எதிர்காலம் பற்றியிலது" என்பர்.

"சாய்மார்: மாரீற்று முற்று எதிர்கால முணர்த்திற்று." (நச்சினார்க்கினியர் கலி,பா.80,ப.474). மேற்கண்ட தொல்காப்பிய மற்றும் நன்னூல் இலக்கண விதிப்படி மார் ஈற்று முற்றுச்சொல் எதிர்காலம் பெற்று வரும் என்கிறார்கள். அச்சொல் பெறும் கால வேறுபாட்டைத் தெளிவுறுத்தியுள்ளார். இங்கு மார் ஈறு பல்லோர் படர்க்கை வினைமுற்று என்பதுடன் எதிர்காலம் உணர்த்திற்று என்பதைத்

தெளிவுறுத்தியுள்ளார். எனவே, தொல்காப்பியர் கூறும் மார் ஈற்று முற்றுச்சொல் பல்லோர் படர்க்கைக் காலக்கிளவியோடு முடியும் என்பதை மிகத் தெளிவாக எதிர்காலம் காட்டி முடியும் எனத் தெளிவான வரையறை கொடுத்து உரை இயற்றியுள்ளார்.

அஃறிணைப் பன்மை படர்க்கை வினைமுற்று அகர, ஆகார, வகரமாகிய ஈறுகளைப் பெற்றுப் படர்க்கையிடத்து வரும் வினைச்சொல்லை அஃறிணைப் பன்மை வினைமுற்று எனலாம்.

"அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்று படர்க்கை." (தொல்,சொல், வினை,நூ.218,ப.197)

என்ற நூற்பாவின் வழி அஃறிணைப் பலவின்பால் படர்க்கை வினைமுற்றானது "தன்மைக்கண் கூற்று நிகழாமையும், முன்னிலை விரவு வினையாதலும், அஃறிணைக்கு உரித்தாகி வருதலும் உண்டு" (தெய்வச்சிலையார், தொல்,சொல்,வினை,நூ.210,ப.176) என்பர். எனவே, அஃறிணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்றானது தன்மைக்கண் நிகழாமலும், முன்னிலையில் விரவியும் வரும் இயல்புடைத்தாகும்.

"அஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறை கண்ண தாகும்" (நன்னூல், நூ.329, ப.450)

என்பர் பவணந்திமுனிவர். இங்குக் குறிப்பிடப்படும் அகரம், ஆகாரம் ஆகிய இரண்டும் அஃறிணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் என்பர். எனவே, இவ்விரண்டனுள் ஆகாரம் 'எதிர்மறை கண்ணதாமன்றி உடன்பாட்டு வினைக்கண் வராது' (சிவஞானமுனிவர், நன்னூல்,நூ.329.ப.450) என்பர் சிவஞானமுனிவர். எனவே, அகரம் உடன்பாட்டிலும் பன்மையிலும் படர்க்கையிலும் வரும் எனலாம். எனவே, தொல்காப்பியர் கூறும் வினைமுற்றானது ஈற்றில் வரும் 'வகரம்' குறித்துப் பவணந்திமுனிவர் கூறாது, 'அ,ஆ' என்ற இரண்டனை மட்டும் கூறி அஃறிணைப்பன்மை வினைமுற்று விகுதி என்கிறார். இவற்றின் மூலம் இடைக்காலத்தில் மறைந்துபோன தன்மையாக 'வ்'கர ஈற்றினைக் கருதமுடிகிறது. தொல்காப்பியர் அ, ஆ இரண்டும் முக்காலத்திற்கு உரியன என்கிறார். ஆனால், பவணந்திமுனிவர் ஆகாரம் எதிர்காலத்திற்கு மட்டும் உரியன என்பர்.

இவ் எதிர்காலக் கூற்றாக 'வகரம்' மட்டும் வரும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். ஆனால் இவ்வெதிர்காலத்திற்கு ஆகாரம் உரித்தாகும் என்று கூறுவது இடைக்கால இலக்கிய வழக்கில் உள்ள வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தின்வழி நன்னூலார் ஆகாரம் எதிர்காலத்திற்கு உரியது என்பர். ஆனால் ஒன்றைக் கருத்தில் கொள்ள முடிகிறது. தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய விதியின்படி அ,ஆ,வ என்பன அஃறிணைப் பன்மை வினைமுற்று என்கிறார். பவணந்திமுனிவருக்குப் பின்னர் உரைகண்ட நச்சினார்க்கினியர் தொல்காப்பியநெறி நின்று உரை இயற்றியுள்ளார்.

இவற்றின் மூலம் இடைக்கால இலக்கிய வழக்கில் 'வகரம்' அஃறிணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்றைக் கருத்தில் கொள்ளாவிட்டாலும் தொல்காப்பியநெறி நின்று நச்சினார்க்கினியர் உரை இயற்றியுள்ளார். ஆனால், நன்னூலார் இடைக்கால வழக்கில் 'வகரம்' சிதைவுற்றதையும், 'ஆகாரம்' என்பது 'வகரம்' பெற்ற இடமான எதிர்கால வழக்கினை, ஆகாரம் பெற்றமையைப் பவணந்திமுனிவர் பதிவுசெய்துள்ளார். கலித்தொகை உரையில் நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள்வழி அஃறிணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்றைக் காண்போம். எனினும் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நெறியின்படி உரை இயற்றியதுடன் மூலநூல் இலக்கண நெறியைப் போற்றிக் கடைபிடித்துள்ளார். ஆனால் நன்னூலார் இடைக்கால இலக்கண வளர்ச்சியில் உள்ள மாற்றங்களைப் பதிவுசெய்யும் முகமாக, ஆகாரம் எதிர்காலம்பற்றியும், முக்காலம்பற்றியும் வரும், இத்துடன் வகரம் வழக்கொழிந்துள்ளதையும் பதிவு செய்துள்ளார்.

சான்றாகத் "தாமரையிற் தனித்த மலர்கள் இரண்டு தம்மிற் சேர்ந்து ஒப்பொத்த முகைகளுக்கு நடுவே நின்று வேறொரு பூக்கள் சிறிதுந் தன் அருகு சேர்தலின்றி முறுக்கு அவிழ்ந்தன" என்ற

உரைவிளக்கத்தின் வழி "அவிழ்ந்தன என வினைமுற்றாக உரைக்க" (நச்சினார்க்கினி, கலி,பா.77,ப.458) என்பர். எனினும் நச்சினார்க்கினியர் அவிழ்ந்தன என்ற அகர ஈற்றுப் பன்மைப் படர்க்கை வினைமுற்றுச்சொல்லைச் சுருக்கமாக வினைமுற்று என்பர். எனவே, அகரத்தை ஈறாகவுடைய படர்க்கை வினைமுற்றைக் கொண்டு முற்றுப் பெற்றுள்ளது. அவிழ்ந்தன என்ற சொல்லின்வழிப் படர்க்கையில் வரும் அகர ஈற்று முற்றைப் பதிவு செய்துள்ளார் நச்சினார்க்கினியர். எனவே, நச்சினார்க்கினியர் இலக்கண நெறிநின்று உரை இயற்றிய திறத்தை மேற்கண்ட சான்றின்வழிக் காணமுடிகிறது.

**வியங்கோள் வினைமுற்று**

வியங்கோள் வினை ஏவல் செயலில் விழைதல், வெறுத்தல், விதித்தல் என்ற பொருண்மையில் க, ய, ரகர ஒற்று ஆகிய ஈறுகளைக் கொண்டு வரும். இவை இருதிணைகளுக்கும் பொதுவகையால், ஐம்பால் மூவிடங்களில் வரும். ஆனால் தொல்காப்பியர் அஃறிணையில் வரும் வியங்கோள் வினைமுற்றானது திணை, பால், இடம் குறித்துத் தன்மையிலும் முன்னிலையிலும் வியங்கோள் வினை ஏற்காது வரும் என்கிறார்.

"அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி" (தொல்,சொல்,நூ.220,ப.181)

இடைக்கால இலக்கணமான நன்னூல் வியங்கோள் வினைமுற்று ஈறுகள் குறித்துக் கூறுவனவற்றைக் காணலாம். க, ய, ரகர ஒற்று இறுதியாக வருவனவற்றை வியங்கோள் வினைமுற்று என்பர்.

"க யவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப" (நன்னூல்,நூ.338,ப.461)

எனவே, கோபலையர் வியங்கோள் வினைமுற்று ஈறுகளாகப் பின்வருவனவற்றைக் கூறுவர். அவை "க, ய, ர், அல், ஆல், உம், மார், ஐ ஆகியனவற்றை வியங்கோள் வினைமுற்று ஈறுகளாக" (கோபாலையர், ப.144) வரையறுப்பர். எனவே, நாம் ஒன்றைக் கருத முடிகிறது, தொல்காப்பியர் வியங்கோள் வினைமுற்று ஈற்றெழுத்தை வரையறைப்படுத்தாது, வியங்கோள் சொற்கள் வரும் இடப்பொருண்மையைக் கூறிச் சென்றுள்ளார். ஆனால், பவணந்திமுனிவர் வியங்கோள் வினை முற்றுச்சொல் வரும் தன்மையை இடம், பால் தன்மைகொண்ட ஈறுகளை நிரல்படுத்தி நூல் இயற்றியுள்ளார். எனினும் இக்காலத்தில் தமிழ் இலக்கணப்பேரகராதி இயற்றிய கோபாலையர் உரை நூல்களின்வழி ஆராய்ந்ததில் க, ய, ர், அல், ஆல், உம், மார், ஐ ஆகியவை வியங்கோள் வினைமுற்று ஈறுகளாக வருவதற்கு உரித்தாகும் இயல்புடையன என்பர். எனவே, இக்கருத்தினை நோக்கும்போது வியங்கோள் வினைமுற்று ஈறுகள் காலந்தோறும் மொழி வளர்ச்சிக்கு ஏற்றார்போல உரைகளின்வழி வளர்ந்த வளர்ச்சிப் படிநிலைகளைக் காணமுடிகின்றது.

வியங்கோள் வினைமுற்றானது ஏவல்பொருள் மேல் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய பொருண்மைப் பற்றி முற்றுப்பெற்று வரும் சொல்லை வியங்கோள் வினைமுற்று எனலாம். வியங்கோள் வினைமுற்று விகுதிகளாகக் க, இய, இயர் ஆகியவற்றைக் கொண்டு முற்றுப்பெறும். எனினும், தெய்வச்சிலையார் வியங்கோள் வினைகுறித்துக் கூறுவன. "செய்க – பொருட்கண், வாழ், உண், தவிர் முதலான ஏவல் குறித்து வரும்" (தெய்வச்சிலையார்,தொல்,சொல்,நூ.220) என்பர். எனவே, வியங்கோள் வினைப் பொருண்மையின் தன்மையையும் வியங்கோள் பெறும் இடம் குறித்தும் பின்வருமாறு காணலாம்.

"முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
-------------------
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய"

(தொல்,சொல்,வினை,நூ.224)

தொல்காப்பியர் வியங்கோள் வினைமுற்றுக் குறித்து முன்னிலை வினை, வியங்கோள் வினை, இன்மை, செப்பல், வேறென் கிளவி, செய்மன, செய்யும், செய்த என்ற வினைச்சொற்கள் விரவி வரும் நிலையினையுடைத்தாகும்.

வியங்கோள் என்பது "தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடத்து உரைப்போனின் விருப்பத்தை வெளிப்படுத்தி ஏவல் போல வரும் கிளவி வியங்கோட்கிளவி" என்கிறார் பொற்கோ (பொற்கோ, ப. 157). ஆனால், அஃறிணையைக் குறிக்க வருமிடத்துப் படர்க்கையில் மட்டும் வரும் எனலாம்.

வியங்கோட் கிளவி ஏவற்பொருண்மையில் முற்றும் முடிதலை உணர்த்தும் சொல் வியங்கோள் வினைமுற்றுச் சொல்லாகும். வியங்கோள் வினைமுற்று எண்ணுப்பெயர்களில் திணை விரைவுப் பெயர்களிடத்தும் வரும் என்பதைக் கூறுவர்.

"வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்" (தொல்,சொல்,கிளவி,நூ.45)

இவ்வாறாக, வியங்கோள் வினைமுற்றுக் குறித்து மூன்று நூற்பாக்களில் இலக்கணம் வரையறுப்பர் தொல்காப்பியர். தொல்காப்பியர் கூறிய இலக்கணம் உரையாசிரியர்கள் உரைகளின்வழி எவ்வாறு விளக்கம் பெறுகிறது என்பதை ஒப்பு நோக்குவோம்.

**பரிமேலழகர் உரையில் வியங்கோள் வினைமுற்று**

"தெற்றென்க வென்பது–தெற்றெனென்பது முதனிலையாக வந்த வியங்கோள். அது தெற்றென வென்னுஞ் செயவெனெச்சத் தானறிக" (பரிமேலழகர், ப.222). எனவே தெற்றென்க என்பது பொருண்மை நோக்கிய வியங்கோள் வினைமுற்று. இது தெற்றென என்று முதனிலைச் சொல்லாக வந்து செயவென் எச்சத்தான் அறியப்பட்டுத் தெற்றென்க என்றாயிற்று. எனவே, முதனிலைச் சொல்லின் தன்மையிலிருந்து திரிந்து வியப்புக் கருதி வருவது வியங்கோள் வினைமுற்று என்பதாகும்.

**அல் ஈற்று வியங்கோள் எதிர்மறை**

"அல் விகுதி வியங்கோள் எதிர்மறைக்கண் வந்தது" (பரிமேலழகர், ப.102). அல் ஈற்று வியங்கோள் எதிர்மறைப் பொருண்மையைத் தந்து பொருள் உணர்த்தும் தன்மையுடையதாகும்.

**அகர ஈற்று வியங்கோள்**

"ஏமாக்க' என்னும் வியங்கோள் வேண்டிக்கோடற் பொருட்டாகலின் தன்மை கண் வந்தது" (பரிமேலழகர்,பரிபாடல்,பா.7,அடி.85,ப.54) ஏமாக்க என்பது வேண்டிக்கோடல் என்ற பொருண்மையில் தன்மை இடத்து வந்தது என்பர். இங்கு 'க' என்ற வியங்கோள் விகுதியில் உள்ள 'க்' மொழியியல் நோக்கில் எதிர்கால இடைநிலையை உணர்த்துவதால் இதனை வியங்கோள் இடைநிலை எனலாம். எனினும், ஈற்றில் உள்ள அகரம் வியங்கோள் வினைமுற்று விகுதியாகும். எனவே, 'க' என்ற ஈற்றெழுத்தானது க்+அ ஆகிய இரண்டு உருபுகளும் இணைந்து கூட்டு வடிவமாக 'க' என்றாகி கூட்டுருபனாக வடிவமைத்து கொண்டுள்ளது. இவ்வடிவம் குறித்து அகத்தியலிங்கம் கூறுவன "க' விகுதி 'க்' என்னும் எதிர்கால இடைநிலையும் 'அ' என்னும் வியங்கோள் வினை விகுதியும் சேர்ந்த கூட்டு வடிவமாகும்." (ச.அகத்தியலிங்கம், சொல்லியல்,ப.357) எனவே, ஏமாக்க என்ற வியங்கோள் வினைமுற்றுள் ஈற்றில் உள்ள 'க' என்ற வியங்கோள் விகுதியை ஒரு கூட்டுருபன் வடிவமாகக் கருத முடிகிறது. எனவே, வியங்கோள் வினைமுற்று விகுதிகளின் நிலை குறித்து "தொல்காப்பியம் வியங்கோள் வினைமுற்று விகுதிகள் பற்றி கூறவில்லை. உரையாசிரியர்கள்தான் குறிப்பிடுகின்றனர்"

(சு.அழகேசன் (ம) த.வேல்மயில், இலக்கணத் தேடல்கள்,ப.45) என்று கூறுவதன் மூலம் வியங்கோள் வினைமுற்று விகுதிகள் வரையறுத்ததில் உரையாசியர்களின் பங்கு அளப்பரியது. உரையாசிரியர்கள் உரையின் வழி வியங்கோள் வினைமுற்று வளர்ச்சி பெறும் தன்மையை அறியமுடிகின்றது.

**நச்சினார்க்கினியர் உரையில் வியங்கோள்**

"மறக்க: வியங்கோள்" (நச்சினார்க்கினியர், கலி, பா.அடி.1-9, ப.212) தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரைகளில் காணப்படும் வியங்கோள் ஈறுகளாக அல், இ, அ, அர், உம், மா, க ஆகியவற்றை வியங்கோள் வினைமுற்று ஈறுகளாக நச்சினார்க்கினியர் குறிப்பிட்டு உரை இயற்றியுள்ளார். எனவே, இந்த ஈறுகள் தொல்காப்பிய இலக்கணத்தோடும், நன்னூல் மற்றும் இடைக்கால இலக்கணத்தோடும் ஒப்பு நோக்கி வியங்கோள் பெறும் வடிவத்தைக் கருத ஏதுவாக அமைகிறது.

**வினையெச்சம் வேறு பல பெயர்பெற்று முற்றாதல்**

முற்று வினைச்சொற்கள் பால் விகுதியுடன் பெயரைக்கொண்டு முற்றுப் பெற்று வருகின்றன. இவ்வினைமுற்றுச் சொற்கள் வேறு பல வினையெச்ச வினையைக் கொண்டு முற்றுப்பெறுதற்கு உரியன. அவை, வினையெச்சச் சொற்களாலும், பெயரெச்சச் சொற்களாளும், முற்றுச்சொற்களாளும் எனச் சொல்லின் தன்மை வேறுவேறு பல பெயர்களைக் கொண்டனவாக அமைகின்றன.

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குரிய" (தொல்,சொல், எச்சம்,நூ.457,ப.334)

என்று, தொல்காப்பியர் வினையெச்சச் சொற்கள் வேறுபல பெயர்ப்பெற்று வரும் என்பதைக் கூறுகிறார். எனினும் வினையியலில் எச்சச்சொல் வருமிடம் குறித்துக் கூறிய பின்னர் எச்சவியலில் சொல்லப்படாத செய்திகளின் இடத்தைக் கூறவும், எஞ்சிய சில இலக்கணத்துக்கு வழுவமைதியாக எச்சவியல் என்ற ஒர் இயலை வரையறைச் செய்கின்றது என்கிறார் வெள்ளைவாரணர். (வெள்ளைவாரணர், தொல்காப்பியம் – நன்னூல் ஒப்பீடு சொல்லதிகாரம்,நூ.457,ப.436)

"உரையிடத் தியலும் உடனிலை அறிதல்" (தொல்,சொல்,எச்சம்,நூ.458,ப.337)

என்ற நூற்பாவின் மூலம் ஓர் எச்ச வாய்பாடாக வரும் ஒரு வினைச்சொல் மற்றோர் இடத்தில் மற்றோர் எச்ச வாய்பாட்டை ஏற்று நடக்கும் இயல்புடைய தன்மையை வினையெச்ச முற்று எனலாம். நச்சினார்க்கினியர் கூறுவது "ஓர் எச்ச வாய்பாடாகக் கூறும் இடத்து அதுதானே மற்றோர் எச்ச வாய்பாட்டிற்கும் ஏற்று நடக்கும், கூட்டத்தினை அறிந்து தொடர்மொழிக்கு ஏற்ப வெவ்வேறாகப் பொருள் உரைக்க என்றவாறு". எனவே எச்சவாய்பாடு உரைகளின் தொடர்மொழிக்கு ஏற்ப மற்றோர் பொருளுரைக் கூறும்போது மாறுபடும் தன்மைக் கொண்டதனை எச்ச வாய்பாடு எனலாம். நன்னூலானது வினையெச்சம் பல்வேறு வடிவமாகத் திரிந்து வருதல் குறித்து வரையறைப்படுத்தியுள்ளது.

"சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை" (நன்னூல்,நூ.346,ப.479)

என்ற வினைச்சொல், வினையெச்ச வாய்பாடுகளாகவும் பெயரெச்ச வாய்ப்பாடுகளாகவும் வரும். இவ் வாய்பாடுகள் பிற வினையெச்ச வாய்பாட்டு வடிவமாகத் திரியினும் பொருள் திரியாது என்பர். இவ்விலக்கண விதிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு உரைகளில் காணக்கூடிய வினையெச்ச வாய்பாட்டு வடிவம் முற்றுப்பெறும் என்று உரையாசிரியர்கள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

**நச்சினார்க்கினியர் உரையில் வினையெச்சமுற்று**

தொல்காப்பிய 457-ஆம் நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர் வினையெச்சம் வேறு பல பெயர் வடிவம் பெறும் என்று உரைப்பர். இவ்விளக்க உரையில் நச்சினார்க்கினியர் பலவகையான வினையெச்ச வடிவத்தை வகைப்படுத்துவர். வினையெச்ச வாய்பாடுகளை வகைப்படுத்தும் நூற்பாவிற்கு விளக்கம் கூறும்போது, எச்ச வாய்பாடுகள் முற்றாகச் செயல்படும் தன்மை உடையது என்பர். அவையாவன, "ஆ, போ என்பன முதல் நிலையாய்க் காலங்காட்டும்." 'யகர' ஒற்றுப்பெற்று ஆயினான், போயினான் என முற்றும் அதன்கண்ணே தோன்றுதலின் ஆகு, போகு எனக் குற்றுகர ஈற்று முதல்நிலை இன்றாமென்று உணர்க. இதனானே வினையெச்சம் முற்றாய்த் திரியும் என்பதும் உணர்க." (நச்சினார்க்கினியர், தொல்,சொல்,நூ.230,ப.210) இம் மேற்கோளின் மூலம் அவர் இயற்றிய இலக்கிய உரைகளிலும் பல்வேறு வடிவமாக உள்ள வினையெச்ச வாய்பாடுகள் முற்றாதலும், திரிதலும் என்று அமைவனவற்றைப் பின்வருமாறு காண்போம்.

**பெண்பால் படர்க்கை வினையெச்சமுற்று**

வாயாள் : வினையெச்சமுற்று (நச்சினார்க்கினியர்,திருமுருகு,அடி.56,ப.41)

அறியாள்: வினையெச்சமுற்று (நச்சினார்க்கினியர்,கலி,பா.40,அடி.9,ப.66)

மேற்கண்ட வினையெச்சமுற்று வகைகளை நோக்கும்போது உயர்திணைப் பெண்பால் படர்க்கை ஒருமை குறிப்பு வினைப்பெயர், வினையெச்சமுற்று என்று விரித்துக் கூறலாம். இங்கு வினையெச்சக் குறிப்புப்பெயர் தொக்கிய தொகை வடிவத்தைப் பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட வினையெச்ச முற்றுச்சொற்களின் வினையடிச் சொல்லைக் காணலாம். வா, அறி ஆகிய வினையடிச்சொல் முதல்நிலையாய் காலம்காட்டும் 'யகர' ஒற்றும், பெண்பால் விகுதியும் பெற்று முற்றாகியுள்ளது. மேற்கண்ட வினையடிச் சொல்லுடன் யகர ஒற்றுப் புணர்ந்து வினையெச்சமாகும் நிலையைப் பெற்றுள்ளது. இங்கு வாய், அறியாய் என்ற வினையெச்சம் பெண்பால் விகுதியை ஏற்றமையால் வினையெச்ச முற்று வடிவமாகியுள்ளது.

**தன்மைப் பன்மைத் தெரிநிலைக் குறிப்பு வினையெச்சமுற்று**

தன்மை பன்மை தெரிநிலையையும் குறிப்பு வினையெச்சமும் கொண்டு முற்றுப் பெறும் தன்மை உடையது. செய்து என்ற வினையெச்ச வாய்ப்பாடு எச்சப்பொருளில் திரிந்து முற்றாகும் இயல்புடையது.

"அவற்றுள்
பன்மை யுரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியன் மருங்கின் திரிபவை உளவே" (தொல்,சொல்,நூ.209)

இங்குத் தொல்காப்பிய விதியினைத் தழுவும் தன்மைப்பன்மை வினையெச்சம் முற்றுப்பெறும் பொருண்மையைப் பின்வருமாறு காணலாம்.

**எதிர்காலத் தன்மைப்பன்மை வினையெச்ச முற்று**

"குருவாம்" வினையெச்சமுற்று (நச்சினார்க்கினியர்,கலி,பா.42,அடி.19,ப.252)

இங்குக் 'குரு' என்ற வினையடிச்சொல் செய்து என்னும் எச்சப் பொருண்மை உடையது. குரு என்னும் செய்தென் எச்சத்துடன் ஆம் ஈற்றுத் தன்மைப் பன்மை புணரும்போது, இஈஐ வழி யவ்வும், ஏனைய உயிர் வழி வவ்வும் என்ற விதியின் அடிப்படையில் வகர உடம்படுமெய் தோன்றி, குருவாம்

என்றாயிற்று. அவ்வாறு புணரும்போது தோன்றிய 'வகர' இடைநிலை எதிர்காலப் பண்பைக் குறிக்கும் இடைநிலையாகும். 'ஆம்' ஈற்றை ஏற்றதால் தன்மைப்பன்மைத் தெரிநிலை வினைமுற்று விகுதி திரிந்து முற்றுப் பெற்றுள்ளது. எனவே, இம் முற்றைத் தன்மைப் பன்மை எதிர்கால வினையெச்சமுற்று என்று உரைக்கலாம்.

**உயர்திணைப் பலர்பால் படர்க்கைத் தெரிநிலை வினையெச்சமுற்று**

அர், ஆர் என்னும் விகுதியை ஈறாகக்கொண்ட பலர்பாலைக் குறித்த வினையெச்சச்சொற்கள் மேற்கண்டவாறு முற்றாகும் தன்மை உடையன. இவை படர்க்கைகண் தெரிநிலை வினைமுற்றெச்சமாக வருவனவாகும்.

"தீபட வரும் இடித்தன்ன குரலினர்" – இவை வினையெச்சமுற்று – (நச்சினார்க்கினியர், திருமுருகு, அடி.171, ப.59)

இவ் வினையெச்ச முற்றின் அமைப்பை நோக்கும்போது வினையடிச் சொல்லாகக் குரல் என்பதைக் காண முடிகிறது. இவ் வினையடிச் சொல்லானது 'இன்' என்ற இறந்த கால இடைநிலையுடன் புணர்ந்து அர் என்ற பலர்பால் படர்க்கை விகுதி ஏற்று, முற்றாகத் திரியும் தன்மை உடையது. இவை செய்து என்னும் எச்ச வாய்பாட்டுடன் பின்னர் 'இன்' என்ற கால இடைநிலைகளுடன் ஆர் என்ற பால்விகுதி பெற்று முற்றாகும். எனினும், ஒரு வினையடிச்சொல் எச்சமாகிப் பின்னர், கால இடைநிலையுடன் அர் விகுதி புணர்வதால் எச்சம் முற்றாகும் இயல்புடையனவற்றைக் காண முடிகிறது. எனவே, வினையெச்சமுற்று அமைப்பானது கால இடைநிலை, பால், இட, விகுதிகளை ஏற்று முடிவு பெறுகின்றது. இடைக்கால உரை வரலாற்றின் வழி நாம் அறிவது என்னவோ எனின் எச்சங்கள் இடைநிலையுடன் முற்றுப்பெற்று வரும் தன்மையை உரையாசிரியர்கள் விளக்க முற்படுவதைக் காணலாம்.

**வினையெச்சம் வினைக்குறிப்பு முற்றாய்த் திரிதல்**

அன்றி என்பது இகர ஈற்றுச் செய்து வினையெச்ச வினைக்குறிப்பு நிலைமை உடையது. அன்றி என்ற எச்சம் அல்லது எனப் பொருள்படும். எனவே, அன்றி என்ற வினையெச்ச வினைக்குறிப்பு அல்லதை என வினைக்குறிப்பு முற்றாய்த் திரிபுற்று நின்றதைக் காணமுடிகிறது.

"அன்றியென்னும் வினையெச்ச வினைக்குறிப்பு அல்லதை என வினைக்குறிப்பு முற்றாய்த் திரிந்தது. அருள் அன்பிற்குக் காரணமாய் மனத்து நிகழ்வது - (நச்சினார்க்கினியர்,கலி,பா.15,அடி.9,ப.96)
அன்றி

என்ற குறிப்பு வினையெச்சம் திரிபடைந்து அல்லதை எனப் பொருள்படும். அல்லதை என்பது வினைக்குறிப்பு முற்றாகத் திரிந்து நின்று பொருள் உணர்த்திற்று. எனவே, வினையெச்சம் பொருண்மை நோக்கில் திரிந்து முற்றுப் பெறும் தகுதி உடையதாகும்.

**செய்தெனெச்சம் வினைக்குறிப்போடு முடிதல்**

தொல்காப்பியர் கூறக்கூடிய ஒன்பது வகையான எச்ச வாய்ப்பாடுகளுள் முதன்மையானது செய்தென் எச்சம் ஆகும். இவ் வினையெச்ச வாய்பாடு, தான் செய்து முடிக்கக் கருதிய கருத்தாவினது, வினைப்பொருண்மையை உணர்த்தும் சொல்லை முடிபாகக் கொண்டு முடியும் இயல்புடையது. செய்தென் எச்ச வினையைக் குறிப்பாகக் கொள்ளுவதால் செய்தெனெச்சம் வினைக்குறிப்போடு வரும் எனலாம். மதுரைக்காஞ்சி உரையின்வழி நச்சினார்க்கினியர் செய்தென் எச்சம் வினைக்குறிப்பைக் கொண்டுவரும் என்று கூறுவர்.

"உண்டென்னுஞ் செய்தெனெச்சம் உறையவென்னும் வினைக் குறிப்போடு முடிந்தது"
(நச்சினார்க்கினியர்,மதுரைக்காஞ்சி,அடி.225,ப.362)

உண்டு என்னும் செய்தென் எச்சம், உறைய என்ற செய்த என்னும் பெயரெச்சக் குறிப்போடு முற்றுப்பெற்றுள்ளது. இங்கு உண்டு என்பது செய்து வாய்பாட்டு வினையெச்சம், உறைய என்ற பெயரெச்சத்தைத் தழுவியது. எவ்வாறு எனில் உறைய என்ற பெயரெச்சக்குறிப்பு உண்டபின் உறங்க வேண்டும் என்ற வினையைக் குறிப்பாகக் கொண்டுள்ளது. எனவே, ஒரு வினையெச்சம் இன்னொரு பெயரெச்ச வினையைக் குறிப்பாகக் கொண்டுள்ளதால் செய்தெனெச்ச வினைக்குறிப்பு முற்று என்று கூறலாம். எனினும், இந்நிகழ்வு குறித்துத் தொல்காப்பியர் "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்று கூறுகின்ற விதி இவ்வெச்சத்துடன் ஒத்துப்போகும் நிலையுடைத்தாகும்.

**வினையெச்ச வினைக்குறிப்பு முற்று**

செய்தென் எச்சம் கால இடைநிலையுடனும், பால்விகுதியுடனும் வினைக்குறிப்பைக் கொண்டு முற்றுப்பெறும் தன்மை உடையதாகும். "கண்ணியன்: வினையெச்ச வினைக்குறிப்பு முற்று." (நச்சினார்க்கினியர்,திருமுருகு,அடி.192,ப.63) கண்ணி என்னும் செய்தென் எச்சம் 'அன்' விகுதியுடன் புணரும்போது யகர உடம்படுமெய் "இஈஐ வழி யவும்" என்ற விதிப்படி தோன்றும் இயல்புடையது. எனவே செய்தென் எச்சம் அன் விகுதியுடன் புணர்ந்ததால் வினையெச்சக் குறிப்பு முற்றாயிற்று. இவ்வெச்சம் குறிப்பாய் ஆண்பாலுக்காகி எச்ச நிலையிலிருந்து திரிந்து முற்றுப் பெறுவதால் வினையெச்ச வினைகுறிப்பைக் கொண்டு முற்றுப்பெறும் இயல்புடையதாகும்.

**முடிவுரை**

இவ்வாய்வுக் கட்டுரையில் துணை வினைச்சொற்கள் கொண்டு முற்றாகும் தன்மையும் வினையெச்சச் சொற்கள் முற்றாகும் தன்மையும் வியங்கோள் சொற்கள் முற்றாகும் தன்மையும் ஆய்ந்துரைப்பதாக அமைக்கப்பட்டன. எதிர்கால முற்றுச்சொல்லின் தன்மையை உணர்த்துவதால் எதிர்கால முற்றுச்சொல் என்கிறார். ஒரு வினையெச்சச்சொல் ஆக, அன்று முதலிய துணைவினைச் சொல்லினை ஏற்று முற்றுப்பெறும் இயல்புடையது. செய்யும் என்னும் பெயரெச்சம் காலமயக்கத்தால் முற்றுப் பெறும் தன்மையை விளக்க முற்பட்ட நச்சினார்க்கினியர் முற்றுச்சொல்லாகும் பண்பினை உணர்ந்து முற்றுச்சொல் என்றுரைப்பர். க, ட, த, ற ஆகிய நான்கு ஒற்றும் முற்றுச்சொல்லின் ஈற்றில் வந்து முற்றுப்பெற்றமையால் தொல்காப்பியர் கூறும் விதியைப் பின்பற்றிய பாடலாசிரியன் உளக்கருத்தை விளக்கக் கருதியதனை உளப்பாட்டுத் தனித்தன்மை முற்று எனலாம். தொல்காப்பியர் கூறும் அ, ஆ, வ என வரும் பலவற்றுப்படர்க்கை விதியின் தன்மையைப் பவணந்திமுனிவர் தம்கால வழக்குநிலையைப் பதிவுசெய்துள்ளார்.

இங்கு நச்சினார்க்கினியர் பாடலாசிரியர் காலக்கருத்தோடு அகர ஈற்று வினைமுற்றுச் சொல்லினைப் பன்மை படர்க்கை வினைமுற்றுச்சொல் என்றார். வியங்கோள் வினைமுற்று ஈறுகளாக க, ய, ர், அல், ஆல், மார், ஐ முதலிய ஈறுகள் 'செய்க, பொருட்கண், வாழ், உண், தவிர் போன்றன ஏவல் பொருண்மையில் வரும். மேலும் தன்மை, முன்னிலை, படர்க்கையிலும், எண்ணுப்பெயர்களிலும், திணைவிரவுப் பெயர்களிலும், வியங்கோள் வினை, இன்மை, செப்பல், வேறென் கிளவி, செய்மன, செய்யும், செய்த என்ற வினைச்சொற்களிலும் விரவி வரும் இயல்புடையன. மேற்கண்ட ஈறுகள் அல்லாது பரிமேலழகர் உரையில் செயவென் எச்சம் பெற்றும், வியங்கோள் வினை முற்றுப் பெற்றும் வரும் என்பர்.

ஏமாக்க என்ற வியங்கோள் வினைமுற்றின் ஈற்றில் உள்ள 'க' என்பது கூட்டுருபன் பண்பில் வியங்கோள் வினைமுற்றுத் தன்மையைப் பெற்றது. இவ்வினைமுற்று வடிவப் பொருண்மையை விளக்க முற்பட்ட பரிமேலழகர் இதனுள் பொதிந்துள்ள மொழியில் கோட்பாட்டினை விளக்கவே வியங்கோள் வினைமுற்று என்று பொருளுரைத்துள்ளனர். வினையெச்ச வாய்பாடுகள் முற்றாய் திரியும் பண்புடையன என்கிறார் நச்சினார்க்கினியர். வினையெச்சச்சொற்கள் கால இடைநிலையுடன் பால், இட விகுதிகள்

பெற்று முற்றாகும் தன்மையுடையது. அல், இ, அ, அர், ஆம், உம், மா, க ஆகிய ஈறுகள் மேற்கண்ட வினைப்பொருண்யில் முற்றுப் பெறும் தன்மையுடையது. செய்தெனெச்சம் பெயரெச்ச வினைக்குறிப்போடு, செய்தெனெச்சம் வினையெச்ச வினைக்குறிப்போடும் முற்றுப்பெறும் தன்மையை விளக்குகிறார், நச்சினார்க்கினியர்.

**பார்வை நூல்கள்**


அகத்தியலிங்கம், ச. (1962). *சொல்லியல் – வினையியல்*. அண்ணாமலை நகர்: அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்.

அழகேசன், சு. & வேல்மயில், த. (2009). *இலக்கணத் தேடல்கள்*. சென்னை: காவ்யா பதிப்பகம்.

கோபலையர், தி. வே. (2005). *தமிழ் இலக்கணப் பேரகராதி*- எழுத்து. சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

சிவஞானச் சுவாமிகள். (உ.ஆ.). (1998). *நன்னூல் விருத்தியுரை*. சென்னை: பாரிநிலையம்.

தெய்வச்சிலையார். (உ.ஆ). (2003). *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்*. சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

நச்சினார்க்கினியர். (உ.ஆ). (2003). *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்* சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

நச்சினார்க்கினியர். (உ.ஆ.). (1925). *கலித்தொகை மூலமும் உரையும்.* (இ.வை. அனந்தராமையர் பதிப்பு. திருவல்லிக்கேணி: நோபில் அச்சுக்கூடம்.

நச்சினார்க்கினியர். (உ.ஆ.). (1950). *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* (உ.வே. சாமிநாதையர் பதிப்பு). சென்னை: கபீர் அச்சுக்கூடம்.

பரிமேலழகர். (உ.ஆ.). (1964). *திருக்குறள் மூலமும் உரையும்*. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பவணந்தி முனிவர். (1998). *நன்னூல்*. சென்னை: பாரிநிலையம்.

பொற்கோ. (2000) *இலக்கணக் கலைக் களஞ்சியம்*. சென்னை: பூம்பொழில் வெளியீடு.

வெள்ளைவாரணர், க. (2010). *தொல்காப்பியம்-நன்னூல் சொல்லதிகாரம்*. தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக் கழக வெளியீடு.